செ.வெ.எண்.56/ ஆகஸ்ட்  நாள் : 27.08.2018

# பத்திரிக்கைச் செய்தி

தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் சார்பில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற ஆகஸ்ட் மாதம் - 31ம் தேதி கடகத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தின் அருகாமையில் அமைந்துள்ள தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.

இம்முகாமில் 5ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான பள்ளி கல்வி முடித்தோர்இ டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள் மற்றும் பொறியியல் பட்டதாரிகளும்இ தையற் பயிற்சி உள்பட பல்வேறு திறன் பயிற்சி பெற்றவர்களும் கலந்து கொண்டு பணி வாய்ப்பினை பெறலாம்.

தருமபுரி, நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை, ஒசூர் மற்றும் சென்னையை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. வேலையளிக்கும் நிறுவனங்களும் மற்றும் வேலைநாடுநர்களும் முகாம் தொடர்பான விவரங்களுக்கு 04348-235006 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

எனவே தருமபுரி மாவட்டத்தை சார்ந்த இளைஞர்களும் பொதுமக்களும் ஆகஸ்ட் 31ம் தேதியன்று காலை 09.00 மணி முதல் நடைபெறவுள்ள இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**